# "தேவனுடைய புத்திரர்கள்" [கலா. 3:26]

"தேவனுடைய புத்திரர்கள்" என்ற சொற்றொடர் (1) தோற்றம், (2) உறவுமுறை, மற்றும் (3) இயல்பு ஆகியவற்றின் கருத்துக்களை உள்ளடக்குகின்றது.

முதலாவதாக, நமது ஆவிக்குரிய தொடக்கத்தினால் நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கின்றோம். ஆவிக்குரிய வகையில் (நாம்) தேவனால் பிறத்தல் என்பது தான் நம்மை அவருடைய புத்திரர்களாக்குகின்றது. பெற்றோர்களால் பிறந்தவர்கள் அவர்களின் பிள்ளைகளாய் இருப்பது போலவே, தேவனால் பிறந்தவர்கள், அவருடைய பிள்ளைகளாய் இருக்கின்றனர். இயேசுவால் குறிப்பிடப்பட்ட புதிய பிறப்பை நாம் அனுபவித்திருந்தால் (யோவா. 3:3-5; 1 பேது. 1:3, 23ஐயும் காணவும்), நாம் தேவனால் பிறந்துள்ளதால் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம் (யோவா. 1:13).

இரண்டாவதாக, நாம் ஆவிக்குரிய வகையில் தேவனுடன் உறவுள்ளவர்களாய் இருப்பதால், நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கின்றோம். பேதுரு மாற்குவைத் தம் மகன் என்று அழைக்கும் பொழுது (1 பேது. 5:13) "குமாரன்" என்ற வார்த்தையை இந்த அர்த்தத்தில் தான் பயன்படுத்தினார், இவ்வார்த்தை, பேதுருவுடன் மாற்கு ஆவிக்குரிய வகையில் இளைய மகன் என்ற அர்த்தத்தில் தொடர்பு படுத்தப்பட்டார் என்று அர்த்தப்படுகின்றது.

மூன்றாவது, நாம் ஆவிக்குரிய வகையில் மறுபடி பிறந்து, நம்மைப் பிறப்பித்தவராகிய அவருடைய சாயலை மேற்கொள்வதால் நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருக்கின்றோம். 1 யோவான் நிருபத்தில், நாம் தேவனால் பிறந்திருந்தால் பாவத்தைச் செயல்படுத்துவதில்லை (3:9; 5:18) என்று நாம் கற்கின்றோம். நாம் தேவன் மீது அன்புகூர்ந்து, அவரை அறிந்துள்ளோம் (4:7), இயேசுவில் விசுவாசம் கொள்கின்றோம் (5:1), உலகத்தை வெல்லுகிறோம் (5:4) மற்றும் பொல்லாங்கு எதுவும் நம்மைத் தொடாதபடிக்குக் காத்துக் கொள்கின்றோம் (5:18).

"புத்திரர்கள்" அல்லது "பிள்ளைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள huioi என்ற வார்த்தையில் நாம் யாருடைய புத்திரர்களாய் அல்லது பிள்ளைகளாய் இருக்கின்றோமோ, அவருடைய இயல்பைக் கொண்டிருப்போம் என்ற கருத்து அடங்கியிருக்க முடியும். "மகன்" என்ற

*வார்த்தை பின்வரும் வசனப் பகுதிகளில் இவ்வகையான கருத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது:*

*"நரகத்தின் மகன்" (மத். 23:15).*
*"இடி முழக்க மக்கள்" (மாற். 3:17).*
*"சமாதான பாத்திரன் [கிரேக்.: huios, "மகன்" என்ற அர்த்தம் தரும்]" (லூக். 10:6).*
*"இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள்" (லூக். 16:8; 20:34).*
*"ஒளியின் பிள்ளைகள்" (லூக். 16:8; யோவா. 12:36; 1 தெச. 5:5).*
*"உயிர்த்தெழுதலின் பிள்ளைகள்" (லூக். 20:36).*
*"கேட்டின் மகன்" (யோவா. 17:12).*
*"ஆறுதலின் மகன்" (அப். 4:36).*
*"பிசாசின் மகன்" (அப். 13:10).*
*"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" (எபே. 2:2; 5:6).*
*"பகலின் பிள்ளைகள்" (1 தெச. 5:5).*
*"கேட்டின்/அழிவின் மகன்" (2 தெச. 2:3).*

*இவை ஒவ்வொன்றிலும் "....ன் மகன் [கள்]" என்பது அந்த இயல்பைப் பெற்றிருத்தலையே அர்த்தப்படுத்துகின்றது. நாம் தேவனால் பிறந்துள்ளதால், அவரில் நமது ஆவிக்குரிய தொடக்கத்தைக் கொண்டுள்ளதால், அவருடன் ஆவிக்குரிய வகையில் உறவுமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், மற்றும் அவருடைய இயல்பின் குடும்பப் பண்புகளைக் கொண்டுள்ளதால் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம்.*